SS DIGITAL'S
Specialist in Digital Colour Printing
அச்சுத் தேவைக்கான தீர்வு
நியாய விலையில் விரைவான மற்றும் தரமான சேவை.
அனைத்து விதமான அச்சிடல் வேலைகளும்
A6,A5,A4,A3
கலர் லேசர் பிறின்டிங், கலர் போட்டோ கொம்பி
டைப் செட்டிங் & கிரபிக்ஸ் டிசைனிங்
உங்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே
எமது ஒரே குறிக்கோள்
Con: 026-2224835, & ssdigitals.shan@gmail.com
No 58, Vidyalayam Road, Trincomalee.



AUGUST 05, 2012
மலைமுரசு
அறைவு 01 இயம் 02
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்
MALAIMURASU
ஆவணி மாதம் 21ம் திகதி

இலவசப் பிரதி
பிரதி ஞாயிறு தோறும்
திருமலையில் இருந்து
வெளியாகும் வார இதழ்

# சிவன் வீதியில்
# சம்மந்தர் முழக்கம்



மாகாண சபையின் பொலீஸ், காணி அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெறுவதை தடுக்கவே த.தே.கூ தேர்தலில் போட்டி என திருக்கோணமலை வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் குறிப்பிட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தரின் முக்கிய முழக்கங்கள்.

- **நாங்கள் சிங்கள மக்களை எதிர்க்கவில்லை ஆனால் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை வெறுக்கிறோம்.**
- **நாம் முஸ்லீம் காங்கிரஸோடு பங்காளனாக செயற்பட தயாராக இருக்கிறோம்**
- **மாகாண சபை தேர்தலின் பின் முஸ்லீம் காங்கிரஸ் அரசுடன் இணைந்தால் அது முஸ்லீம் மக்களை ஏமாற்றுவதாகவே அமையும்.**
- **இலங்கைக்குள் விசேடமாக வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் சுய உரிமையோடு வாழ வேண்டும்.**
- **நாங்கள் தனிநாடு கேட்கவில்லை, ஒருமித்த இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்**

## கூட்டமைப்பின் முன் மனந்திறந்த மக்கள்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கிழக்குமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் திருமலையில் பிரதேசக் கூட்டங்களை நடாத்தச் சென்றிருந்து போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் திருமலை மக்கள் வெளிப்படுத்திய மன உணர்வுகளின் சுருக்கத்தை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு சிவஞானம் சிறீதரன் அவர்கள் வெளிப்படுத்தினார்.

"ஒரு பாடசாலை ஆசிரியரைக் கூட இடமாற்றம் செய்ய வலுவற்ற மாகாண சபையை வெல்வதன் ஊடாக எமக்கு என்ன கிடைக்கப்போகின்றது" என மக்கள் விரக்தியுடன் வினவியுள்ளார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வழங்கிய சுருக்கச் செவ்வி பக்கம் 8ல் முழுவதுமாக தரப்படுகிறது

### பத்மலதா விடுக்கும் செய்தி

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நான் செயற்பட மாட்டேன் என கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முக்கிய கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பத்மநாதன் பத்மலதா தெரிவித்துள்ளார்.

8ம் பக்கம்

### தமிழ் பேசும் மக்கள் வடகிழக்கு இணைந்த தாயகத்தையே விரும்புகிறார்கள்.

கடந்த கிழக்கு மாகாணசபை தேர்தலை யுத்தம் முடிந்த கையோடு நடத்தியமையால் எமது மக்கள் தேர்தலை எதிர்கொள்ள விரும்பவில்லை அவர்களின் உணர்வுகளை அறிந்தே அத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பங்குபெற முடியாமல் போனதென்று. கிழக்கு மாகாணசபை தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் கு.நாகேஸ்வரன் மலைமுரசுக்கு தெரிவித்தார்.

8ம் பக்கம்

### அரசுடன் இணைந்திருந்தால் சிலர் எம்மை சின்னாபின்னமாக்கி இருப்பார்கள் எம். சி. எம் அஸ்வர் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்ட முஸ்லீம்கள் முஸ்லீம் காங்கிரஸிற்கு மட்டுமே தமது ஆதரவை வழங்க முன்வர வேண்டும் என்று திருகோணமலை இளைஞர் காங்கிரஸின் தலைவர் எம். சி. எம் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

8ம் பக்கம்

### மாணவர்களிடையே மோதல் உருவாக்கும் Z – புள்ளி விவகாரம் திருத்திய மதிப்பீட்டுற்கு எதிராக மனுத்தாக்கல்.

2011ல் பரீட்சைக்குத் தோற்றிய 33 மாணவர்கள் திருத்தப்பட்ட Z – புள்ளியின் தீர்ப்புக்கு எதிராக இலங்கையின் மீயுயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

8ம் பக்கம்

NEW ADMISSION FOR ACADEMIC YEAR 2012-2013
JULY - SEPTEMBER 2012
NEW ADMISSION WILL BE ISSUED FOR
PLAY GROUP
LKG UKG STEP 1 GRADE 01 - 08
OUR PAST ACTIVITIES

GREENWICH INTERNATIONAL SCHOOL
#23, GREEN ROAD, TRINCOMALEE. T.P-026 2226818, 077 4123672 E-MAIL :- GISTRINCOMALEE@GMAIL.COM
GREENWICH EDUCATION ACADEMY (PVT) LTD. (REG NO-PV 76073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

## ஆசிரியத் தலைப்பு

உள்ளூர்ப் பத்திரிகையொன்றில் செய்திகள் தொடர்பாக மனநிலையில் மாற்றம் தேவையாயுள்ளது. அறிவு தெரிந்த நாள் முதல் தேசிய பத்திரிகைகளினை வாசித்து அதன் ஒவ்வொரு பக்கங்களையும் மனக்கண் முன் நிறுத்தி பத்திரிகையென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும், இவ்வாறான செய்திகள்தான் வரவேண்டும், இவ்வாறு தான் செய்திகளை வகைப்படுத்த வேண்டும் என சிந்தனைகளும், செயல்களும் ஒரு நிலைப்படுத்தப்பட்டு போய்விட்டது.

முப்பத்தைந்து வருடங்களுக்கு மேல் இவ் எண்ணமே எம்முள் மேலோங்கி நிற்கும் இவ் வேளையில் திடீரென உருவாகிய எமது உள்ளூர்ப் பத்திரிகையான மலைமுரசின் செய்திகளை அரசியல், உலகம் போன்ற பெரும் திசைகளிலிருந்து பெரும்பகுதிக்கு உள்ளூரை நோக்கித் திருப்பவேண்டிய கடப்பாடு எம்முன் நிற்பதுடன் எம் நண்பர்களாலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

உள்ளூர்ச் செய்திகளைத் திரட்டுவதில் நாம் எதிர்கொள்ளும் முக்கிய சவால் அவை வெளிவராமலிருப்பதே. எனவே மலைமுரசின் வாசகர்களாகிய உங்களை நோக்கி நாம் விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் உங்களது ஊர்ச் செய்திகளை எமக்குத் தெரியப்படுத்துங்கள் என்பதே,

இம் மிகப் பெரிய சேவையானது மலைமுரசு முற்றுமுழுதாக திருக்கோணமலைச் செய்திகளை முன்நிறுத்தி வெளிக்கொணரும் தனது தலையாய பணியைத் திறம்பட நிகழ்த்தக் கூடியதாயிருக்கும். உங்கள் பிரதேச செய்திகளை உலகத்திற்குத் தெரியப்படுத்த எம்முடன் கை கோர்த்துக் கொள்ள வருகிறீர்களா?

-ஆசிரியர்-

- தகவல்களை இலத்திரனியல் அஞ்சலிலோ, தபால் மூலமோ, தொலைபேசி மூலமோ எமக்கு அறியத்தரப்படலாம்.

## வாக்காளர்களுக்கு!

நடைபெற இருக்கின்ற மாகாணசபைத் தேர்தலில் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதிய அட்டை, சமயத் தலைவர்களுக்கான அடையாள அட்டை என்பவற்றை பயன்படுத்தி வாக்களிக்க முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அத்தோடு சபை தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 20ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிய கிராமசேவகர் பிரிவு தேவை

திருக்கோணமலையின் புல்மோட்டை ஜின்னாபுரக் கிராமத்துக்கு தனியாக கிராம சேவையாளர் பிரிவொன்றை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

புல்மோட்டை பகுதியில் 3150 குடும்பங்களும்,நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இலங்கையரசின் திட்டப்படி 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவையாளர் பிரிவு அமைக்கப்படுவதுடன், தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களுக்கும் கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன. இதன்படி 356 குடும்பங்களை 19 கிலோமீற்றர் பரப்பளவிலே கொண்டுள்ள ஜின்னாபுர கிராமத்துக்கு தனியான கிராம சேவகர் பிரிவு அமைக்கப்படல் வேண்டும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக கவனம் செலுத்தி, மக்களின் அசௌகரியங்களை நீக்கி புதிய கிராம சேவகர் பிரிவு உருவாக ஆவணை செய்யுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

## JOB EX -2012

வெளிநாட்டில் வேலைவாய்ப்பைத் தேடும் உங்களுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சும் வெளிநாட்டு சட்டச் சமூகமும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அனுசரனைகளுடன் கொழும்பு சட்டச் சமூகமும் (Colombo Low Society) டைம் டிரவலர்ஸ் இனைந்து ஜொப் எக்ஸ்போ எனும் தொழிற் காட்சியை 6ம்,7ம் திகதிகளில் இலங்கைக் கண்காட்சிக் கூடத்தில் நடாத்தவுள்ளன. (லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு முன்புறமாக).

இக் கண்காட்சியில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகங்கள், தூதுவராலயங்கள், குடியகல்வு திணைக்களம், வங்கிகளும், நிறுவனங்களும், பயண, மற்றும் பயணச்சீட்டு (Ticket) முகவர்கள், படப்பிடிப்பு நிறுவனங்கள், சட்ட உதவி நிறுவனங்கள் ஒரே கூரையின் கீழ் பிரசன்னமாகவுள்ளன.

தேர்வு செய்யப்படுபவர்கள் உடனடியாகவே நியமனம் பெற்றுப் பயனளிக்கக்கூடியதாக உள்ள இத் தொழிற்காட்சி வெளிநாட்டு வேலை தேடுபவர்க்கு ஓர் வரப்பிரசாதமாக அமைகிறது. ஏதுவாக அனைத்து நிறுவனங்கள் அமைப்புக்களும் ஒரே கூரையின் கீழ் வருவது.

பெருமளவு தமிழ் மக்கள் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாறும் தளமாக வெளிநாட்டு வேலைதேடும் களம் காணப்படுகிறது. எனவே இச் சந்தர்ப்பத்தை விருப்புடையோர் அனைவரும் பயன்படுத்திக் கொள்வது சிறந்தது.

## இஸட் புள்ளியை மறுப்பதற்காக மறக்கடிப்பு

புதிய இஸட் புள்ளி விவகாரம் மாணவர்களுக்கு திருப்தியளிக்காத நிலையில் பல்கலைக் கழகங்களுக்கு மேலதிகமாக இவ்வருடம் மூவாயிரம் மாணவர்களை சேர்த்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும்,உயர்கல்வி அமைச்சும் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுவதோடு புதிய இஸட் புள்ளிகளின் அடிப்படையில் 25000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் அடுத்துவரும் கல்வியாண்டுக்காக சேர்க்கப்பட உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இஸட் புள்ளிப் பிரச்சினையை மறக்கடிப்பதற்கு இவ் வகையான செயற்பாடுகள் இடம் பெறுவதாக மாணவர்கள், புத்திஜீவிகள் மட்டத்தில் பொதுவான எண்ணப்பாடுகளும் காணப்படுகின்றன.

இதே வேளை உயர்தர பரீட்சையில் 4வது தடவையாகவும் தோற்றுவதற்கான அங்கீகாரம் அமைச்சரவையில் பெறப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

### மலைமாடன் பதில்கள்...

கேள்வி :- கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு தமிழர்கள் முழுமையாக வாக்களிப்பதால் 30 வருடகால தமிழர் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்குமா? (லதன்)

பதில் :- தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள் எமது பிரச்சனை கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலுள்ளது.

இனி உங்களது கேள்விக்கு வரலாம். தற்போதைய சூழலில் இலங்கை மற்றும் உலக அரசுகளுடன் பேசுவதற்குப் பலமான ஒரு அமைப்பு எமக்குத் தேவையாக உள்ளது. இப் பலமான அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்தாலும் இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே "தமிழர்களின் தரப்பென" கொள்ள முடியாது எனும் வாதத்தை முன்வைத்துள்ளது. நீங்கள் அதை ஏற்றுக்கொள்கிறீர்கள் என்றால் வாக்களிக்காதீர்கள்.

நாங்கள் வாக்களிக்காமலிருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலுக்குறைவடையும். அக்குறைவு தேச மற்றும் சர்வதேச அரங்கெங்கும் எதிரொலிக்கும். மேலும் நீங்கள் வாக்களிக்காமலிருந்தால் மாகாணசபையின் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் பறிபோய்விடும். எனவே வாக்களியுங்கள். தமிழர் பிரச்சனைக்குத் தீர்வை மாகாண சபை பெற்றுத்தராது. ஆனால் தீர்வுக்கான ஆர்ப்பரிப்பை (Voice) கொடுப்பதற்கு உங்கள் வாக்கு முக்கியமாயிருக்கும்.

### மீளுமா கருமலையூற்று

கருமலையூற்றுக் கிராமத்தை மீண்டும் முஸ்லீம்களிடம் முழுமையாக ஒப்படைக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் பொதுச் செயளாலர் ஹஸன் அலி கேட்டுக் கொண்டுள்ளார்.

திருக்கோணமலை மாவட்டத்தின் கொட்டியாரக் குடாவின் அருகில் காணப்படும் இச் சிறிய மீன் பிடிக்கிராமத்தில் படையினர் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

110க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இச் சிறிய கிராமத்தில் மக்களின் 54 ஏக்கருக்கும் மேற்பட்ட காணி படையினர் வசமானதால் மக்கள் பல அசௌகரியங்களை அனுபவிப்பதால் சுதந்திரமான மக்கள் வாழ்வை பெற்றுத்தருமாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.


ஜெயம் பால் உற்பத்திகள்

திருகோணமலையில் முதன்முறையாக

பதப்படுத்தப்பட்ட பசுப்பால் வீட்டுக்கு வீடு விநியோகம்.

விசேட வைபவங்களுக்கு யோகட், சுவையூட்டப்பட்ட பால் என்பன உங்கள் இடங்களுக்கே கொண்டுவந்து தரப்படும்.

எமது ஏனைய உற்பத்திகள்:- பசுத்தயிர், பன்னீர், சுவையூட்டியபால்...

DOOR TO DOOR

தொடர்புகளுக்கு
0773891946
0772114518


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பைக் கட்டிக்காக்கும் சம்மந்தன் ஐயாவின் தலைமைத்துவம்

ஈழத்தழிழரின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் மையப்புள்ளியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனப்படும் தமிழ்க் கட்சிகளின் ஒன்றியம் பல தமிழ்க் கட்சிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.இவ் ஒவ்வொரு தமிழ்க் கட்சியும் தமக்கான தனிப்பட்ட நோக்கங்களையும் செயற்பாடுகளையும் கொண்டவையாக இருக்கின்றன. இவற்றை ஒரே மூக்கணாங்கயிற்றால் இறுக்குவதென்பது அப்படியொன்றும் சுலபமான காரியமல்ல ஆனால் இக்கட்சிகள் யாவற்றையும் தனது புத்தி சாதுரியத்தாலும் பழுத்த அரசியல் அறிவாலும் ஐயா சம்மந்தனே கட்டிக்காத்து வருகின்றார் என்பது வெளிப்படையான உண்மை.

பிரதேசவாதம் எனும் பேரலை எழுந்து எம் பிரதேசங்களைத் தனித்தனியாக்கி தமிழர்களைத் தமிழர்கள் என்ற ஓரச்சில் இயங்கவிடாமல் கூறுபோட்டபொழுது சம்மந்தன் ஐயாவின் மனத்துணிவும் விட்டுக்கொடுப்புக்களுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலம் மாகாணம் சார்ந்து சிதறாமலிருக்க அடிப்படைக் காரணமாயிற்று. மேலும் அக்காலகட்டத்தில் புலிகளின் பலம் பிரிந்து செல்பவர்களுக்கு ஓர் அச்சம் தரும் சக்தியாக இருந்தது. ஆனால் அக்கணத்தில் யாவரும் ஏற்றுக்கொள்ளும் தலைவராகச் சம்பந்தன் ஐயா இருந்ததே கூட்டமைப்பின் உருவாக்கதிற்கும் தொடர் செயற்பாட்டிற்கும் வழிசமைத்தது. சிரேட்ட தமிழரசுக் கட்சிகளின் தலைவர்கள் பலர் சம்மந்தன் ஐயாவின் கரத்தை வலுப்படுத்தியதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இம்முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போதான வாக்காளர் தேர்வில் சம்மந்தன் அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் ஏராளம். அச்சவால்களை நாம் இரண்டாக வகுத்து நோக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவக் கட்சியான தமிழரசுக் கட்சியிலிருந்து எழுந்த சவால்களை முதலாவதாகவும், ஏனைய அங்கத்துவக் கட்சிகளிலிருந்து எழுந்த சவால்களை இரண்டாவதாகவும் கொள்ளலாம். தமிழரசுக் கட்சியிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை மேற்கொண்டவர்கள் தமக்குத் தமக்கென ஆசனங்களைக் கோரிய போது எழுந்த சவால்கள் மிகத் திறமையாக சம்பந்தன் தலைமையிலான சிரேட்ட குழுவினரால் கையாளப்பட்டிருந்தது. இக் கையாள்கையில் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. நிராகரிக்கப்பட்டவர்களின் நடவடிக்கைகள் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சவாலாக எழுந்தன. நிராகரிக்கப்பட்டவர்களின் முதல்ப் பகுதியினர் அமைதியாக அத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டனர். ஆனால் இரண்டாவது பகுதியினரோ அம்முடிவை ஏற்றுக் கொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக அவநம்பிக்கைகளையும், அவதூறுகளையும் மக்களிடையே பரப்ப முயற்சிக்கின்றனர். இதன் ஒரு கட்டமாக சிலர் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. மூதூர் பிரதேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தாக்கப்பட்டு பயமுறுத்தப்பட்டதாக எழுந்த உறுதிப்படுத்தப்படாத செய்திகள் இதன் ஓரங்கமாகும். ஆனால் மூன்றாவது பகுதியினர் பெருந்தலையிடியொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்படுத்தியிருந்தனர்.

அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்கள் ஊடாக அவ் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கு தம்மை நியமனம் செய்யுமாறு சம்மந்தன் ஐயாவை வலியுறுத்தத் தொடங்கியிருந்தனர். இவ்வகைப் பிரிவினரை நாம் ஏனைய கட்சிகள் ஊடாக எழுந்த சவால்களாகக் கொள்ளலாம். இப் பெரும் சமருக்குப் பின் சர்ச்சைகளின்றி தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்குமிடையே சம்மந்தன் ஐயா சமரசமாக ஆசனப்பகிர்வை திருக்கோணமலையில் மட்டுமல்ல மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் நெறிப்படுத்தியிருந்தார். ஒரு கட்டத்தில் அவர் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பானவர்களை வாஞ்சையுடன் "இதை எனது கட்டளையாக எடுங்கள்" என்று அறிவுறுத்தியதாகவும் தெரிகின்றது.

ஆனால் திருமலை மாவட்ட ஆசனப் பகிர்வில் தமிழரசுக் கட்சியால் நிராகரிக்கப்பட்ட ஒருவருக்கு கூட்டணிக் கட்சியால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அவர் தவிர்க்க முடியாது ஏற்றுக்கொண்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் கட்டிக் காத்தது எனினும் பின்னர் அவ் வேட்பாளரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சிறிய ஒரு கரும்புள்ளியை உருவாக்கி விட்டது.

ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கும் போது தமிழர்களிடம் தற்போது குடிகொண்டுள்ள சுயத்திற்கு முக்கியத்துவம், பிரிந்து போதல், தனித்து வாழ்தல் போன்ற எண்ணங்களுக்கிடையே பலமான கட்சிகள் பலவற்றையும் அதன் தலைவர்களையும் இணைத்து, ஒரே உறைக்குள் பல வாள்களை இரத்தமின்றிச் செருக திரு. சம்மந்தனால் மட்டுமே இன்றைவரை முடிந்திருக்கிறது.

- இந்திரன் -

# டானியல் அன்ரனி எனும் என் அன்புத் தோழன்

நண்பன் டானியல் அன்ரனியை நான் அறிமுகம் கொண்டது எழுபதுகளின் ஆரம்பத்தில். அப்போது அன்ரனியுடன் சசி கிருஸ்ணமூர்த்தி, ராதேயன், பாலகிரி. வ.ஐ.ச. ஜெயபாலன் போன்றொர் இணைந்து 'செம்மலர்கள் இலக்கிய வட்டம்' என்ற அமைப்பை உருவாக்கியிருந்தனர். 'செம்மலர்கள் இலக்கிய வட்டம்' வெளியிட்ட சஞ்சிகைக்கு 'அணு' என்று பெயர் சூட்டியிருந்தனர்.

யாழ் நூலக (மேல்மாடி) கேட்போர் கூடத்தில் நூல் அறிமுகங்களை அவர்கள் செய்து வந்தனர். மற்றைய உறுப்பினர்களை விட பேச்சாற்றல் பெற்றவராக இருந்த அன்ரனி செம்மலர்கள் இலக்கிய வட்டத்தின் குரல் தரவல்ல உறுப்பினராக இருந்தார்.

அவர் நாவந்துறையைச் சேர்ந்தவர். அப்போது அவர் எழுதும் கதைகளில் மெரீனா பீச்சை நாவந்துறைக் கடற்பிரதேசமாக காட்டும் கதைகளை எழுதியிருந்தார். எனது கடுமையான விமர்சனத்தின் பின்னரே அதிலிருந்து விடுபட்டார்.

எங்களது உறவு நெருக்கமாகியமைக்கு இடதுசாரி சிந்தனையும் ஒரு காரணம். டானியல் அன்ரனி விமர்சனத்தை ஏற்றுக் கொள்வதில் உடன்பாடானவராக இருந்தார். சந்தர்ப்பவாதியாக அவர் இருந்ததில்லை. கடுமையான விமர்சகரான என்னோடு பலர் முரண்பட்டிருந்தாலும் டானியல் அன்ரனிக்கு என்னோடு பல விடயங்களில் உடன்பாடு இருந்தது.

செம்மலர்கள் இலக்கிய வட்டம் இயங்காத நிலையில் 'சமர்' எனும் சஞ்சிகையை அவர் வெளியிட ஆயத்தமானார். அவர் முயற்சியில் எனது பங்கு கூடுதலாக இருந்த போதும் 'சமர்' சஞ்சிகையில் ஒரு வரிகூட நான் எழுதவில்லை. 'அலை'யும் 'சமரு' ம் பேனாவால் போர் புரிந்த காலம். நண்பன் வ.ஐ.ச. ஜெயபாலன் நகைச்சுவையாக ஒருமுறை என்னிடம் கூறினார். L.T.T.E. IPKF இடம் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டது. இரண்டு பேர் மட்டும் இன்னும் ஒப்படைக்கவில்லை. ஒருவர் அ.யேசுராசா மற்றவர் டானியல் அன்ரனி என்று.

டானியல் அன்ரனியின் 'வலை' சிறுகதைத் தொகுப்பு இலங்கையில் வெளிவந்த தமிழ்ச் சிறுகதைத் தொகுப்புகளில் குறிப்பிட வேண்டியது. அத்தொகுப்பின் வெளியீட்டு விழாவில் நான் வெளியீட்டுரையை நிகழ்த்தினேன். பின்னர் நடந்த அறிமுக விழாக்களிலும் அறிமுகவுரையை நானே நிகழ்த்தினேன். நாவாந்துறையைச் சேர்ந்தவரான டானியல் அன்ரனியின் சிறுகதைத் தொகுப்பிற்கு அட்டைப்படத்தை வரைந்தவர் கோ. கைலாசநாதன். டானியல் அன்ரனியின் மறைவிற்குப் பின் சமீபத்தில் அவரது தொகுப்பு மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. கரைவலையே பயன்படுத்தப்படாத. நாவந்துறைக் கடற்பிரதேசத்துக் கதைகள் அடங்கியுள்ள அத் தொகுப்பிற்கு கரைவலை இழுக்கும் ஒரு புகைப்படம் அட்டையாக போடப்பட்டுள்ளது. புதைக்கப்பட்ட டானியல் அன்ரனி உயிரோடு மீள எழுந்தால் அவரது முதற் "சமர்" இப் புத்தக வெளியீட்டினருடனேயே நடக்குமென நம்புகிறேன்.

யுத்தம் பலரைப் பாதித்தது போல் என்னையும், அன்ரனியையும் பாதித்தது. ஒருமுறை அவரைக் கொழும்பில் சந்தித்தேன். ஐலண்ட லொட்ஜில் ஒரே அறையில் தங்கினோம். சுகத்தைவிட துக்கங்களைப் பரிமாறினோம். எனது 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' தொகுப்பு அச்சிலிருந்த நேரம். பழைய பாடல்களைப் பாடி மனம் தேறியிருந்தோம். வேலை இழந்து மனவிரக்தியிலான உணர்வுகளைப் பரிமாறினோம்.

**நந்தினி சேவியர்**

1994 – ஆம் ஆண்டு தை மாதம் அன்ரனியின் கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது. 'அப்பாடா இப்போதாவது உனது தொகுப்பு வெளிவந்ததே, அது மகிழ்ச்சியான விடயம், வெற்றுடப்பாக்களின் ஓசை மிகையாக கேட்கிறது. நாம் ஒதுங்கியிருப்பதனால் தான் நாம் தொடர்ந்து எழுத வேண்டும். உனது புத்தகத்தை வெளியிட (யாழில்) ஏற்பாடு செய்கிறேன் என்றவாறாக எழுதியிருந்தார். அதற்கு சந்தர்ப்பம் ஏற்படாது போல் எனக்கு அத்தொகுப்பை வெளியிடுவதற்கு வெளியீட்டு நிகழ்வை நடத்துவதற்கு எங்குமே சந்தர்ப்பம் கிடைக்காமல் போய் விட்டது. அவனது இறப்பு என்னை மிகவும் பாதித்தது.

நண்பர் லெ.முருகபூபதிக்கு 04.04.1994.ல் ஒரு கடிதம் எழுதினேன், (அவரது கடிதங்கள் எனும் தொகுப்பில் 80ம் பக்கத்தில் மேற்படி கடிதம் உள்ளது) அதில் பின்வருமாறு எழுதினேன்.

'ஒரு காலத்தில் மிக மிக உக்கிரமமாக மக்கள் இலக்கியத்திற்கான சண்டையில் ஈடுபட்டவர்களில் நானும் ஒருவன்'.

நண்பன் டானியல் அன்ரனி – நந்தினி சேவியர் என்ற பெயர்கள் யாழ்ப்பாணத்தில் டானியல் - ஜீவா போல் பேசப்பட்டதுண்டு. இன்று அன்ரனி இறந்து விட்டான். இந்தச் செய்தி 2ம் திகதி வீரகேசரியில் அறிந்து கொண்டேன். அன்ரனியின் இறப்புச் செய்தி பெரிய இடியாக என்னைத் தாக்கியுள்ளது. அவனைப் பற்றி எழுதக் கடமையும், தேவையும் எனக்கு இருக்கிறது. நாங்களிருவரும் இருட்டடிப்புக்கு ஆளாகியவர்கள்.

இன்று பெரிதாக சவடாலடிக்கும் ஈழத்துப் பெரிய தலைமுறை எம்மைப் புதுச்சிவப்புக் கூட்டமாகப் பார்த்தது. இந்த நிலையில்தான் அவனின் 'வலை' சிறுகதை தொகுப்பு 1985ல் வெளிவந்தது. அது உண்மையில் நல்லதொரு தொகுப்பு. அதைப் பற்றி எந்த விமர்சகர்கள் எழுதினார்கள். இன்று அவன் இறந்த பிறகு இரங்கலுரைக்குப் போயிருக்கும் இலக்கிய சததானிகள் அவனை அப்போது ஒரு நல்ல எழுத்தாளனாக அங்கீகரிக்கவில்லை, அதற்காக முதுகு சொறியவும் அவன் தயாராக இருக்கவில்லை.

நண்பா, உணர்ச்சி வசப்பட்ட நிலையில் நான் எழுதுகிறேன். உலகச் சிறுகதைத் தொகுப்பு பற்றி உமது முகவரியுடன் கூடிய செய்தியை தினகரனில் பார்த்தேன் அன்ரனி பற்றிய செய்தியை நீரும் அறிந்திருக்கலாம். மக்களை நேசித்த அந்த நல்ல மனிதனின் படைப்பு ஏதாவது இந்த (உலக) சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறவேண்டும்.

'வலை' தொகுதி உம்மிடம் இருக்கலாம். எனவே அவனது ஒரு கதையை பிரசுரிக்குமாறு கண்ணீர் மல்கும் கண்களுடன் இக்கடிதம் எழுதுகிறேன்..' என எழுதியிருந்தேன், நண்பன் முல்லை அமுதனின் கோரிக்கைக்கமைய டானியல் அன்ரனியை நினைவு கூறும் இக்குறிப்பை எழுதும் போது முடியவில்லை. கண்கள் நீர் சொரிகின்றன. நண்பா, உன் இழப்போடு, மீளவும் இழந்தபடியே தான் என் வாழ்வு தொடர்கிறது என் செய்வேன் என் நண்பா,

வலை எறியவும், சமர் புரியவும்... சளைக்காத துணிவை உனது நட்பு எனக்குத் தந்துள்ளது. நண்பா அதனை நீ அறிவாய்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன இராணுவத் தளபதியின் விஜயத்திற்கு எதிராக இந்தியாவின் இராசதந்திரக் கண்டனம் சாத்தியமானதா?

கடந்த வாரத்தில் சீன இராணுவத் தளபதியின் இலங்கைப் பயணம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்திய சிவசங்கர் மேனனின் பயணத்தை தொடர்ந்து சீன இராணுவத் தளபதியின் பயணம் அமைந்தது. இலங்கையின் இராச தந்திர வெற்றியாகும். ஆனால் இப் பயணத்தைத் தொடர்ந்து இராச தந்திர ரீதியில் இந்தியா தனது கண்டனத்தை வெளியிடும் என வெளியான செய்திகளின் சாத்தியத்தன்மை தொடர்பாக ஆராய வேண்டும்.

இலங்கை ஓர் இறைமையுள்ள நாடு என்பதில் யாருக்கேனும் சந்தேகமிருப்பின் அவர்கள் இந்தக் கூற்றை உடனடியாக நம்பலாம். ஆனால் இலங்கையொரு இறை மையுள்ள நாடு. அந் நாடு எந் நாட்டுடனும் எவ்வகைத் தொடர்பு களையும் மேலும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இலங்கையின் அமைச்சர்களும் தளபதிகளும் அரசு சார் பயணமாக எந்நாட்டுக்குச் செல்லவும், எந்நாட்டு அமைச்சர்களும் தளபதிகளும் இலங்கைக்கு வரவும் வேறு எந்த நாடும் தடைபோட முடியாதபடி இலங்கையின் இறைமை இலங்கையை காப்பாற்றும்.

எனவே சீன இராணுவத் தளபதியின் இலங்கை பயணம் எந்த நாட்டினதும் இராசதந்திர எதிர்ப்புக்கு உட்பட முடியாது. ஆனால் ஒரு கேள்வி எழலாம். யாதெனில் இராணுவத் தளபதியின் பயணம் ஓர் அரசியலாளனின் பயணமாக கொள்ளப்பட்டலாமா? என்பதே இதற்குப் பதிலளிக்கும் முன் நாம் சீன அரசியல் கட்டமைப்பை கருத்திற் கொள்ள வேண்டும். சீன அரசியற் கட்டமைப்பு என்பது அதன் இராணுவக் கட்டமைப்புடன் பின்னிப் பிணைந்தது. இராணுவ பலன்களை பேணிப் பாதுகாக்கும் பிரதான நோக்கே அரசியற் கட்டமைப்புக்கு உண்டு. எனவே சீன இராணுவத் தளபதியின் பயணம் ஓர் அரசியற் தலைவரின் பயணமாகவுமே பார்க்கப்பட வேண்டும். மேலும் சீனாவின் தேசிய பாதுகாப்பு வெள்ளைப் பத்திரிகையின் (White Papers) அடிப்படையில் அதன் பாதுகாப்பு இலக்குகளில் ஒன்றாக எப்போதுமே "உலக சமாதானத்தை பேணுவதும் உலக சமாதானத்தின் உறுதியை தக்கவைப்பதும்" காணப்படுகிறது. எனவே உலக சமாதானம் என்பது இன்று ஆயுதங்களால் மட்டுமே நிலை நிறுத்தப்படுவதால் சீன இராணுவத் தளபதியின் பயணம் அவ்விலக்கு சார்ந்ததாகவே இருக்கும் எனவும் கொள்ளப்பட வேண்டும். அவ்வா றெனில் இந்தியா எச்சந்தர்ப்பங்களில் இராசதந்திரக் கண்டனத்தை வெளியிட முடியும் எனப் பார்ப்போமானால் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே ஓர் முரண்பாடு இருந்து அம் முரண்பாடு சிலவேளைகளில் இராணுவ ரீதியில் முடிவுறுத்தப்படும் நிலை காணப்படும் போது சீன இராணுவத் தளபதி இலங்கைக்கு பயணம் செய்வதை இந்தியா கண்டிக்க முடியும். உதாரணமாக தென் வியட்னாமியக் கடல் பகுதியின் பாவனை தொடர்பாக சீனாவுடன் வியட்னாம் முரண்பட்டுக் கொண்டிருக்கும் போது இந்தியா வியட்னாமுடன் மேற்கொண்ட எண்ணை அகழ்வு ஒப்பந்தத்திற்கு எதிராக சீனா தனது இராச தந்திர எதிர்ப்பை இந்தியாவிற்கு வெளியிட்டது.

எனவே இறைமையுள்ள நாடான இலங்கை அரசிற்கு எதிராக சீனத் தளபதியின் வருகை தொடர்பாக இந்தியா வெளிப்படையாக எத்தகைய கண்டனங்களையும் வெளியிட முடியாது என்பதே உண்மை.

- நாடோடி -

## இலங்கை வர்த்தமானியின் அறிவித்தல்கள்

**வர்த்தமானியின் பிரதியை இலத்திரனியல் அஞ்சலில் பெற்றுக் கொள்ள மலைமுரசின் இலத்திரனியல் முகவரிக்கு அஞ்சலிடுங்கள்.**

**பதவிகள் – வெற்றிடம்**

**கட்டிடதிணைக்களம்**

**இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவி - II ஆம் வகுப்பு "ஆ" பிரிவு**

நிர்மாணித்தல், பொறியியற் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சில் மற்றும் கட்டிடதிணைக்களத்தில் மேற்கூறிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து கட்டிடபணிப்பாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிறைவுத்திகதி 2012.08.30

**பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும்**

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் IIIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை - 2012**

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2012 ஒக்தோபர் மாதம், நகர இல.1 கொழும்பு மற்றும் நகர இலக்கம் 2 யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்படும். விண்ணப்பப் படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2012 ஆகஸ்ட் 24 என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பகிரங்க ஏலவிற்பனை**

**செலான் வங்கி பீஎல்சீ – திருக்கோணமலை கிளை**

நீரோடுமுனைக் கிராமத்தில் அமைந்துள்ள "நீரோடுமுனை" என்று அழைக்கப்படுகின்றதும் அறியப்படுவதுமான அரசநிலம் இருபத்தைந்து தசம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25.8பே.)விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள காணி பகிரங்க ஏலத்தின் மூலம் அதே இடத்தில் 2012, ஓகஸ்த்து 15 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

**விசேட அதிரடிப்படை**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை உதவிப்பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கொஸதாப்பல், விசேட அதிரடிப்படைச் சாரதி பதவிக்குகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிறைவுத்திகதி 2012.08.30.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1) காடுகளில் அதிகமாக இருப்பவை,
1. தாவரங்கள் 2. மலைகள் 3. கொடிகள்

2) மலைநாட்டுப் பகுதியிலுள்ள மக்களுக்கு அதிக பிரச்சனை கொடுக்கும் பிராணி எது?
1. யானை 2. பாம்பு 3. அட்டை

3) கீழ்வரும் பிராணிகளிடையே வித்தியாசமான இயல்புடைய பிராணி எது?
1. புலி 2. தவளை 3. தேரை

4) வனவிலங்குகளை பாதுகாக்கும் சரணாலயம் அல்லாதது,
1. யால 2. குணமண 3. தமண

5) சமாதானத்தின் சின்னமாக கருதப்படும் பறவை,
1. வெள்ளைப்புறா 2. மாடப்புறா 3. வெள்ளை அன்னம்.


### Maths

1)


| | | | | |
|---|---|---|---|---|
| K | P | S | S | P |
| S | | K | | R |
| K | P | S | S | |

ஆகக் கூடுதலாக உள்ள எழுத்து?
1. P 2. R 3. S


2) தரப்பட்ட தொடர்புக்கான சரியான வரிப்படம்,
விலங்குகள், யானை, நாய்





3) மூன்றாம் உருவுடன் தொடர்புடையது எது?





4) வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




1. 40 2. 18 3. 28

5) ஒரு நேர்கோட்டில் எனும்  5 வடிவங்களை ஒழுங்கு வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் 4 வதாகக் காணப்படும் உரு எது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை படைக்கும் - விஜயநாதன் ஆனந்த் பிரஹாஷ்



தனி மனிதன் தன்னை சாதனையாளனாக மாற்றும் போதவன் வரலாற்றாளன் ஆகின்றான். இதனடிப்படையில் உலகினை வென்று வரலாறு படைக்க தயாராகிக் கொண்டிருக்கும் தடகள வீரன் ஆனந்த் பிரஹாஷ் தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் தரம் 08 இல் கல்வி பயிலும் மாணவனாவான்.

பாடசாலை, வலய, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியான சாதனைகள் பலவற்றுக்கு சொந்தக்காரனான இவரின் தடகளச் சாதனைகள் பற்றி ஓர் விரிவான அறிமுகம்.

| | |
|---|---|
| முழுப்பெயர் | - விஜயநாதன் ஆனந்த் பிரஹாஷ் |
| பிறந்த ஆண்டு | - 1999.03.08 |
| பாடசாலை | - தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| பிடித்த விளையாட்டு | - 110m தடைதாண்டல் |

**நிலை நாட்டிய வெற்றிகள்**

பாடசாலை மட்டம்

- தொடர்ந்து எட்டு வருடமாக பாடசாலை போட்டியில் Champion
- 100M U11, 100M U13, LJ U13, 200M U13 ஆகியவற்றில் குறுகிய நேரத்தில் இலக்கை அடைந்து சாதனை

வலைய மட்டம்

- நான்கு வருடமாக கலந்து கொண்ட போட்டிகள் அனைத்திலும் முதலிடம் (100m, 200m. L.J)
- இவ்வாண்டு 2012 (100m, LJ, 100 Hur) ஆகியவற்றில் முதலிடம்.

மாவட்ட மட்டம்

இறுதியாக நடைபெற்ற மூன்று மாவட்டமட்ட பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளிலும், கனிஸ்ட பிரிவாக 13 வயதுக்குட்பட்ட பிரிவில் 100m போட்டியில் இரண்டாமிடமும் 200m, LJ ஆகியவற்றில் முதலிடம்.

மாகாண மட்டம்

ஒரு தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலம் உட்பட ஏழு பதக்கங்கள்

தேசிய மட்டம்

அகில இலங்கை பாடசாலை மட்ட மெய்வல்லுனர் போட்டியில் இந்த வருடம் 15 வயதுக்குட்பட்ட 100m தடைதாண்டல் போட்டியில் கனிஷ்ட பிரிவு மாணவனாக பங்கு பெற்ற தகுதி பெற்றுள்ளார்.

2012 அகில இலங்கை ரீதியாக எம்பிலிபிட்டியில் நடைபெற்ற Junior Campion Ship போட்டியில் முதன் முறையாக பங்கு பெற்றி 14 வயதுக்கு உட்பட 80m தடை தாண்டல் 13.05 ஒடி முடித்து 5வது இடத்தை பெற்றுள்ளார். L.J இல் 5.13m பாய்ந்து நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்.

சாதனையாளராய் பரிணமித்துக் கொண்டிருக்கும் விஜயநாதன் ஆனந்த் பிரஹாஷை மலை முரசு வாழ்த்துவதோடு எமது பிரதேச இளம் சாதனையாளர்களை வெளிக் கொணர்வதில் பெருமையடைகிறது.

- செம்பியன் -

**உங்கள் கேள்விகளுக்கு மலைமாடன் பதில் தருகின்றார். கேள்விகளை மலைமுரசிற்கு தபாலிலோ அல்லது மின்னஞ்சலிலோ அனுப்பிவையுங்கள்.**

**அனுப்பவேண்டிய முகவரி:**
**மலைமாடன் பதில்கள்**
**மலைமுரசு,**
**இல 159A கடற்கரை வீதி,**
**திருக்கோணமலை.**

**மின்னஞ்சல்**
malaimurasu@hotmail.com

**2009 ஐப்பசி - மார்கழி மறுபாதியிலிருந்து இரு கவிதைகள்**

# என் அறையில்

இங்கேதான் எனது
நசுக்கப்பட்டுவிட்ட நானை
சீராக்கி மடித்து அலுமாரியில்
வைத்திருக்கிறேன்

இங்கேதான்
என்னுள்ளே பேயாய்க் குடி கொண்ட
அடக்கவியலா ஆசைகளைப்
பூட்டி வைத்திருக்கிறேன்

இங்கேதான்
காயம்பட்ட என் அகங்காரத்துக்கு
பச்சாத்தாபத் தைலம் தடவிக்
கொள்கிறேன்

இங்கேதான்
நிலைக் கண்ணாடி முன்
நிர்வாணமாகி
அழுகிப் போன என் ஆணவத்தை

காயம் நக்கும் அடிபட்ட
நாய்போல
நக்கிக் கொள்கிறேன்.

இங்கேதான்
வயிறுமுட்டக் குடித்துவிட்டு
என்பரம எதிரிகளை
மிக மோசமான தூஷணைகளால்
சபித்துக் கொட்டுகிறேன்.

இங்கேதான்
உலகுக்கெதிரான என் போரினைப்
பிரகடனம் செய்கிறேன்.
விடிந்ததும்
ஓசையின்றித் தலைகுனிந்து
என் பேடித்தனத்தால்
உதடுகளை இறுக மூடியபடி
வெளியேறுகிறேன்.

ஆங்கில மூலம் - துர்க்கா பிரசாத் பண்டா.
தமிழில் - சௌஜன்யஷாகர்.

## கடவுளின் நாவிலிருந்து அவர்கள் எழுதிச் சென்றார்கள்.

வதை சூழ் ஆத்மாவின்
கிழிபடும் இதழ்களுக்கிடையில்
சிக்கிக் கிடந்தது வார்த்தை
துக்கித்த இருளைப்
பிரவகிக்கும் நோக்குடன்
அதன் விழிகளில் துலங்கும்
கூர்மை
என்னை வேட்டையாடத்
தயாராகவே இருந்தது

வன்மம் குடிகொள்ள
குதறும் வார்த்தைகளை
கூரிய அம்பாக்கி
சமருக்குத் தயாராகும் கணத்தில்
கடவுளின் நாவிலிருந்து
அவர்கள் எழுதிச் சென்றார்கள்
நான் ஏலவே கொல்லப்பட்டவன்
என்பதை

கனகரமேஸ்










ஒருவன் நன்மையிலிருந்து அறிவைப் பெறுவது போலவே, தீமையிலிருந்தும் அறிவைப் பெறுகிறான் - விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் முதல் நூலகம் திருக்கோணமலை பொது நூலகம்



**“ஆலயங்கள் போல் வேற்று மதத்தவரை மறுக்காது எல்லா மதத்தினரையும் அனுமதிப்பதால் ஆலயங்கள் போல அல்லாமல் எல்லாச் சாதியினரையும் எல்லா இடங்களிலும் நுழைய விடுவதால் ஆலயங்கள் போல் ஒரு நூலகத்தை மற்ற நூலகத்தினர் அழிக்க நினைக்காததனால் ஆலயத்தின் தெய்வங்கள் போலல்லாமல் நூலக நூல்கள் எம்மோடு உறவாடுவதால் ஆலயங்கள் போல் சிலருக்கு மட்டும் புனிதமாக அல்லாமல் எல்லாரினதும் புனித இடமாகவிருப்பதால் நூலகம் ஆலயம் அல்ல, அதையும் தாண்டிய சொல்லைத் தேடுகின்றேன்”**

நூலகத்தின் பெருமையை இன்னும் எவ்வளவோ பேர் எத்தனையோ சொற்களில் சொல்லி இருக்கிறார்கள் இருந்து என்ன பயன். இலங்கையின் மிகவும் பழமையான நூலகங்களில் ஒன்றாகவும் ஈழத் தமிழர் தாயகத்தில் அமைக்கப்பட்ட முதலாவது நூலகமாகவும் இருப்பது திருக்கோணமலைப் நகராட்சி மன்றப் பொது நூலகம் என்பதையும், 177 வருடப் பழமை கொண்ட இந்நூலகம் மிகவும் பிரசித்தி பெற்ற யாழ் நூலகத்தை விட 100 ஆண்டுகள் பழமையானது என்பதுடன் திருக்கோணமலையின் பெருமைகளில் மிகமுக்கியமானது.

திருக்கோணமலைப் புறக்கோட்டை நூலகம் (Trincomalee pettah library) என அழைக்கப்பட்ட இந்நூலகம் 1835ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது பற்றிய விபரமான தகவல் கலாநிதி. க.சரவணபவனின் “காலனித்துவ திருக்கோணமலை” நூலின் 223ம் பக்கத்தில் உள்ளது. இவ்வத்தியாயம் பிரித்தானிய நிர்வாக அறிக்கைச்சுருக்கத்தின் மொழிபெயர்ப்பாகும். “1835 : திருக்கோணமலையில் 2 நூலகங்கள் அமைக்கப்பட்டன. Liet.F.J.N. Ind. 37th Regiment நூலகத்தில் 17 பேர் அங்கத்தவர்களாக இருந்தார்கள். Trincomalee Pettah Library நூலகம் கடற்கரையோரமாகக் கட்டப்பட்டது. அது இன்றும் டொக்யாட் வீதியில் முற்றவெளியை அடுத்து காணப்படுகின்றது. 34 சந்தாக்காரர்களை நிரந்தர உறுப்பினராக் கொண்டிருந்த இந்த நூலகத்தில் 500 புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தது. இந்த நூலகத்தின் தலைவராக G.E.Colomb, செயலாளராக B.Crispeyn, பொருளாளராக J.A.Gibson, அறங்காவலர்களாக The Rev.S.O.Gilne, B.Crispeyn ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். துணை நூலகராக L.De.Smith நியமிக்கப்பட்டார்.”

என்று அந்தத் தகவல் சொல்கிறது. பிரித்தானியர் ஆட்சியின் பின் 1946ம் ஆண்டு திருக்கோணமலை நகராட்சி மன்றத்தால் இந்நூலகம் பொறுப்பேற்கப்பட்டது. இது பற்றி தகவல் திருக்கோணமலை நகராட்சி மன்ற பொன்விழா மலரில் படங்களுடன் உள்ளது. அதன் பின்னர் நகராட்சி மன்ற நிர்வாகத்தாலும், நூலக ஊழியர்களாலும் விரிவுபடுத்தப்பட்ட இந்நூலகம் இன்று நவீன நூலகத்திற்குரிய சகல வசதிகளையும் கொண்ட நூலகமாக இயங்கிவருகிறது.

அந்த வகையில் இலங்கையின் மிகப்பழமையான அரச நிறுவனங்களில் ஒன்றாகவும் இந்நூலகம் திகழ்கின்றது. 2010ம் ஆண்டு இந்நூலகத்தின் பவளவிழா கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் திருக்கோணமலை நூலக சமூகமும், கல்விச்சமூகமும் இதனை மறந்து விட்டிருந்தமை வேதனையான விடயம்தான்.

திருக்கோணமலை பற்றிய விசேட சேர்க்கைகள் பகுதி இந்நூலகத்தில் உள்ள மிகவும் முக்கியமான பகுதியாகும். தமிழின் முதல் வரலாற்று நாவலான மோகனாங்கியின் ஆசிரியரான திருக்கோணமலை த.சரவணமுத்துப்பிள்ளையின் “தமிழப் பாஷை” (1893ம் ஆண்டு எழுதப்பட்டது) என்ற தமிழின் முதலாவது தமிழியல் ஆய்வு நூல் மற்றும் அவருடைய தமிழின் முதலாவது பெண்ணியக் கருத்துக்கள் கொண்ட ‘தத்தை விடு தூது’ ஆகியவை இப்பகுதியில் உள்ளன. திருக்கோணமலை தமிழறிஞர் வே.அகிலேசபிள்ளையினால் இயற்றப்பட்டு இதுவரை பதிப்பிக்கப்படாத ஈழத்தின் முதல் தமிழ் நாடகப்பிரதியான ‘கண்டி நாடகம்’ (1887ம் ஆண்டு எழுதப்பட்டதாக இந்த கையெழுத்துப் பிரதியின் முதற் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது) ஆகியவை இப்பகுதியில் உள்ள மிக முக்கியமான நூல்களாகும். மேலும் பெறுமதி மிக்க பல ஆவணங்கள் கொண்ட இப்பகுதியை உருவாக்கி யுத்தகால நெருக்கடிகளுக்குள்ளும் இவற்றைப் பாதுகாத்த முன்னாள் நூலகர் செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்களுக்கு திருக்கோணமலைச் சமூகம் நன்றிக்கடன்பட்டுள்ளது என்பதையும் இவ்விடத்தில் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

புழமை வாய்ந்ததும் சிறப்புமிக்கதுமான திருக்கோணமலைப் பொதுநூலகம் உரிய முறையில் திருக்கோணமலைச் சமூகத்தால் கவனத்தில் கொள்ளாமல் இருந்த. இருக்கின்றமைக்கான சமூகவரலாற்றுக் காரணங்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனைப் புரிந்து கொள்வதற்கு நாம் துறைமுக நகரம் (harbor city) என்ற கருத்தாக்கத்தை புரிந்து கொள்ளவேண்டும்.

துறைமுக நகரம் (harbor city) என்பது துறைமுகங்கள் அமைந்துள்ள நகரத்தில் வாழ்கின்ற சமூகத்தின் இயல்புகள் பண்பாடுகள் பற்றியது. துறைமுக நகரங்களில் பல்வேறு இடங்களில் இருந்து, துறைமுகம் சார் வியாபாரம், தொழிவாய்ப்புகளுக்காக குடியேறிய பல்லின மக்கள் வசிப்பதாக அமைந்திருக்கும். பெரும்பாலும் அவை கடலில் நீண்ட காலம் நிலத்தை காணாத கப்பல் உழியர்கள் ஓய்வு எடுக்கவும், உல்லாசமாக இருப்பதற்குமான களியாட்ட வசதிகள் நிறைந்த இடமாகவும், அதனை ஒட்டிய களியாட்ட பண்பாடு நிறைந்ததாகவுமே காணப்படும். அதன்படி உல்லாச விடுதிகள், மதுபான சாலைகள், உணவு விடுதிகள், தெருவோர பஜார்க் கடைகள் என்பவையே பிரதானமாகவும், அவற்றை நுகரும் காலச்சாரமுமே முக்கியத்துவப்பட்டும் இருக்கும். இதில் நூலகம் போன்ற அறிவுசார் சமூக நிறுவனங்கள் உரிய முறையில் கவனிக்கப்படுதல் என்பது மிகவும் அரிதான விடயமாகவே இருக்கும்.

வரலாற்றுக் காலம் தொட்டு முக்கிய துறைமுகநகராக விளங்கிவரும் திருக்கோணமலையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆயினும் வரலாற்றுக் காலம் தொட்டு தமிழரின் மரபுத் தொடர்ச்சியைப் பெற்ற திருக்கோணமலை முழுமையாக அல்லாமல் அரைத்துறைமுக நகராகவே அல்லது குறைத் துறைமுக நகராகவே இருந்து வருகிறது. இதன் காரணமாகவே திருக்கோணமலையில் அறிவு சார்ந்த சமூக செயற்பாட்டாளர்களும், அறிவு சார்ந்த சமூக நிறுவனங்களும் தோன்றி உருவாகிய போதும், (தற்போது வரை நூலகம்) உரிய கவனிப்பை பெறாமல் இருப்பது கவலைக்குரியதாகும்

அத்துடன் திருக்கோணமலையை ஈழத்தமிழரின் அரசியல்த் தலைநகராக பிரகடனப்படுத்தி அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்த நம் அரசியல் வாதிகள் திருக்கோணமலையை ஒரு பண்பாட்டுத் தலைநகராமாக உருவாக்க முயற்சி செய்யாமையும் திருக்கோணமலையில் அறிவுருவாக்க சமூக நிறுவனங்கள் உரிய முறையில் பேணப்படாமைக்கு ஒரு காரணமாகும்.

இவற்றைக் கருத்தில் கொள்வதனூடாக இனியாவது சமூகத்தின் முக்கிய பங்காகிய அறிவைப் பெருக்கும் செயலில் பெரும் பங்கு வகிக்கும் நூலகத்தை, அதிலும் நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்ட நூலகத்தை உரிய முறையில் பேணிப் பாதுகாப்பதுடன் அதனை வளர்த்துச் செல்ல வேண்டியது எம் கடமையாகும்.

எஸ்.சத்யதேவன்

## இலங்கைத் தமழ் சினிமா பற்றி சில குறிப்புக்கள்

ஒரு விதத்தில் இலங்கைத் திரைப்படங்களைப் பற்றி அதிலும் குறிப்பாக தமிழ் திரைப்படங்களைப் பற்றி பேசும் போது திருப்தியின்மையிலிருந்து ஆரம்பிக்க வேண்டிய ஒரு துன்பியல் நிலைமையை இங்கே அழுத்திக் கூறி வைக்கின்றேன்.

1956ல் வெளிவந்த “கடவுனு பொறந்துவ” முதல் சிங்களப்படத்தைத் தொடர்ந்து சர்வதேச விருதுகளைப் பெறுமளவுக்கு அரை நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட இந்த 56 வருடங்களில் சிங்கள திரைப்படங்கள் சாதனை புரிந்துள்ளன. லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ், தர்மசேன பத்திராசா, தர்மசிறி பண்டாரநாயக்கா, பிரசன்ன விதானகே என பல ஆளுமைகள் சிங்கள திரையுலகை நிகழ்த்துவதில் பங்காற்றியுள்ளன. காமினி பொன்சேகா, ஜோ அபேஷிக் கிரம என அற்பு நடிப்பாற்றலை நாம் கண்டு வியந்துள்ளோம்.

ஏன் எமது இலங்கைச் சினிமா பின் நிற்கிறது? இது ஒரு முக்கிய கேள்வி. சமுதாயம் - முதல் - ஷர்மிளாவின் இதயராகம் தற்போது அசோக கந்தகமவியை நெறியாள்கை செய்யப்பட்டு கேன்ஸ் திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்ட ‘இனி அவன்’ வரை கிட்டத்தட்ட 29 தமிழ்ப் படங்கள் உருவாகியுள்ளன. டப்பிங் செய்யப்பட்டுள்ள 8 படங்களையும் சேர்த்தால் எண்ணிக்கை 37.

இரு உண்மையை இங்கே கூறி வைக்கலாம். முதல் சிங்களப்படத்தை தயாரித்தவர் திரு. எஸ்.எம். நாயகம் (கடவுனு பொறந்துவ) ஒரு தமிழர். சமுதாயம் என்ற 16 m.m தமிழ்ப் படத்தை தயாரித்து நெறியாள்கை செய்தவர் ஹென்றி சந்திரவயை ஒரு 'சிங்களவர்.

ஆரம்பகால ஈழத்துத் தமிழ் திரைப்படங்கள் தயாரிப்பு விடயத்தில் பல இழுபறிகளை சந்தித்தன. நடிகர் தேர்வு, கதைத் தேர்வு, என பல இழுபறிகள். பொருத்தமற்ற நடிகர்கள், வசனங்கள், இந்திய சினிமாக்களை இறக்குமதி செய்தவர்களின் ஆதரவின்மை என்பனவற்றோடு, தயாரிப்பாளர் அல்லது தயாரிப்போடு சம்பந்தப்பட்டவர்களே

தாவீது கிறிஸ்ரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகர்களாக நடிக்க முனைந்தமையும், சினிமா ரசிகர்களை திகைக்கடித்தன. தூர்ந்தெடுத்த கதைகளும் இலங்கை வாழ்க்கைக்கு அன்னியமாகவிருந்தன.

பொன்மணி, வாடைக்காற்று என நமது வாழ்க்கைக்கு நெருக்கமான கதைகள் கூட திரைப்பட உத்தி முறைகளினால் ரசிகர்களுக்கு சலிப்பூட்டின. முக்கியமாக திரையில் பார்த்த பான்மணி தணிக்கையின் பின் நல்ல படமெனும் உணர்வைத் தந்தது. புகழ் பெற்ற சிங்கள, தமிழ் கதை பற்றி பிரக்ஞை இன்மையும் இத் தோல்விக்குக் காரணமாகும். வாடைக்காற்றுப் பாத்திரங்கள் செயற்கையாக நடமாடி வெறுப்பேற்றின.

டாக்சி டிரைவர் கதாநாயகன் திரை முழுக்கலையும் ஆக்கிரமித்த ஒரு அகன்ற மனிதராகவும், யாழ்ப்பாணத் தமிழை உச்சரித்ததாகவும், எரிச்சலையும் ஏற்படுத்தியமையும் உண்மையான விடயங்கள் . கடமையின் எல்லை அரச படப் பாத்திரங்கள் யாழ்ப்பாணத்தமிழ் பேசி கோபத்தை ஏற்படுத்தியிருந்தமை மறக்கமுடியாத உண்மை.

V.P. கணேசன் ஈழத்து M.G.R. ஆக மாற முயன்ற அபக்தமும் எமது ஈழத்து தமிழ் சினிமாவுக்கு நேர்ந்த அவலமாகும்.

(Moqntin in the Junce) மவுன்டின் இந்த ஜஸ்கின் பட உதவி இயக்குனரின் V.V. ஜினைதின் ஷர்மியாவின் இதயராகத்தில் தமிழ் இரசிகர்களின் இதயத்தை நொருக்கினர்.

ஏன் இந்த நிலை? நாங்கள் இந்திய தமிழ் படங்களை எங்களுக்கு ஆதாரமாக கொண்டிருந்தோம். சிங்களத் திரைப்படத்தை பழுதாக்கி கொண்டிருந்தவர் என அழைக்கப்பட்ட லெனின் மொறாயல்ல போன்ற தமிழருக்கு தமிழக தமிழ் சினிமாக்களே வழிகாட்டியாக இருந்தன. அதிலிருந்து அவர்கள் விடுபட்டு நல்ல சிங்களப் படங்களை உருவாக்கி வருகிறார்கள். அந்த நிலையை உருவாக்க நாம் முனைய வேண்டும் சிங்கள கலை இலக்கியத்துறைக்கு அரச அனுசரனை இருப்பது போல் நமக்கு இல்லாதது ஒரு பெரும் குறைபாடுதான். சினிமா என்பது ஒரு கதைத் தொழிற்சாலை, ஒரு வியாபார முயற்சி இது ஒரு கூட்டு முயற்சியும் கூட எனவே முழுமையான ஒத்துழைப்புடன் ஆபத்தின் ஒரு முயற்சியில் இறங்கும் துணிவுமிக்கவர்களே நல்ல ஈழத்து தமிழ் சினிமாவை ஆக்க முடியும் என்பது துணிந்து கூறலாம்.

உண்மையில் இலங்கைத் தமிழ் சினிமா வரலாற்றை அறிய விரும்பும் ரசிகர்களுக்கு தம்பி ஐயா தேவதாஸ் எழுதிய இலங்கைத் தமிழ் சினிமாவின் கதை என்னும் நூலை நான் வாசிக்குமாறு சிபார்சு செய்வேன்.

"நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையை உருவாக்குவோம்".

நன்றி

**கீழே தமிழ் சினிமா பட்டியல்.**

சமுதாயம், தோட்டக்காரி, கடமையின் எல்லை, பாசநிலா, டாக்சிடிரைவர், நிர்மலா, மஞ்சள் குங்குமம், வெண்சங்கு, குத்துவிளக்கு, மீவைப் பெண், புதிய காற்று, கோமாளிகள், பொன்மணி, காத்திருப்பேன் உனக்காக, நான் உங்கள் தோழன், வாடைக்காற்று, தென்றலும் புயலும், தெய்வம் தந்த வீடு, ஏமாளிகள், அநுராகம், எங்களில் ஒருவன், மாமியார் வீடு, நெஞ்சுக்குள் நீதி, இரக்கத்தின் இரக்கமே, அவள் ஒரு ஜீவநதி, நாடு போற்ற வாழ்க, பாதை மாறிய பருவங்கள், ஷர்மியாசாவின் இதயராகம், இன் அவன்,

**டப்பிங்**

கலியுக காலம், நான்னுலட்சம், யார்அவள், சுமதி எங்கே, ஒரு தலைக் காதல், பனிமலர்கள், இவளும் ஒரு பெண், அஜாசத்த.

**கூட்டுத்தயாரிப்பு**

பைலட்பிரேம்நாத், தீ, நங்கூரம், மோகனப் புன்னகை, வசந்தத்தில் ஒரு வானவில்.

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Leader

### சட்டவிரோத படகுகளைத் திருப்பி அனுப்புமாறு ஆஸ்திரேலிய கடற்படையிடம் இலங்கை கடற்படை வேண்டுகோள்.

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக உள் நுழையும் படகுகளை அங்கிருக்கும் எத்தீவுக்குள்ளும் அனுமதிக்காமல் திருப்பி அனுப்பும் படி கேட்டுள்ளதாக இலங்கைக் கடற்படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவின் ஏதாவதொரு தீவுக்குள் இப்படகுகளில் உள்ளோர் தரையிறங்க அனுமதிக்கப்படுவதும் அவை திருப்பி அனுப்பப்படாதிருப்பதும் சட்ட விரோத குடியிருப்பாளர்களை ஊக்குவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து தமிழரான "தயான் அந்தோனி" என்பவர் திருப்பி அனுப்பப்பட்டதுடன் இலங்கைக் கடற்படை இவ்வேண்டுகோளை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இத்திருப்பி அனுப்பப்பட்டவரின் அகதிப் புகழிட கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாலேயே அவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

### பாராளுமன்ற உறுப்பினர் துணிந்த சில்வா வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

முல்லேரியா சூட்டுச் சம்பவத்திலிருந்து படுகாயமடைந்து சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த துணிந்த சில்வா அங்கிருந்து வெளியேறினார். அவர் தற்போது பாராளுமன்ற உறுப்பினரான சஜின் குணவர்த்தனவுக்குச் சொந்தமான சிங்கப்பூரிலுள்ள இல்லத்திலிருந்து உளவளத்துணை சிகிச்சையைப் பெறுவதாக நம்பத்தகு தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் லண்டன் நீதிமன்றத்தில் மேற்கொண்ட முறையீடு தோல்வி.

Standard Charted வங்கிக்கு எதிராக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் லண்டன் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு தோல்வியடைந்துள்ளது. இலங்கை அரசுக்குச் சொந்தமான பெற்றோலியக் கூட்டுத்தாபனம் hedging ஒப்பந்தங்களை Standard Charted உடன் மேற்கொண்ட காரணத்தால் 162 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட கொடுப்பனவை Standard Charted வங்கிக்கு செலுத்த வேண்டிய கடப்பாட்டுக்கு உள்ளாகியுள்ளது.

இவ்வொப்பந்தத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஈடுபட்டபோது பெரும்பாலான பொருளாதார வல்லுனர்கள் அது இலங்கைக்கு பாதகமானதெனக் கூறியிருந்த போதிலும் அவற்றையெல்லாம் சட்டை செய்யாமல் இவ்வொப்பந்தத்தை இலங்கை மந்திரிகள் சபை அங்கீகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### குரங்கு வேட்டையில் வனவிலங்குத் திணைக்களம்

கொழும்பு கோட்டைப் பகுதியில் குழந்தையொன்று குரங்குக் கடிக்கு ஆளானதைத் தொடர்ந்து வனவிலங்குத் திணைக்களம் கோட்டைப் பகுதியில் குரங்கு வேட்டையில் இறங்கியுள்ளது.

## The Sunday Times:

### சில்வெஸ்டர் ஸ்டாலினின் மகன் உயிரிழந்துள்ளார்.

"ஹொலிவூட்" டின் கதாநாயகனாக உலகையே கலக்கிய "ரம்போ" சில்வெஸ்டர் ஸ்டாலினின் மகன் சேஜ் ஸ்டாலன் அதிக போதை மருந்துகளின் பாவனையால் உயிரிழந்துள்ளார். 35 வயதான சேஜ் 1990ல் வெளியாகிய வெற்றிப்படமான "ரொக்கி V" ல் தனது தகப்பனாருடன் அறிமுகமாகியிருந்தார்.


# Vacancy

கிளை வி/முகாமையாளர்கள், உதவி கி/ வி/மு
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் – கந்தளாய்.
தகுதி- GCE A/L 8Y or O/L = 10Y
அனுப்பும் முகவரி- AGM – HR
Sri Lanka Insurance
21 Vavxhall st, Colombo -02

**டோக்கியோ சீமெந்துக் கம்பனி**
முகாமைக் கணக்காளர் - திருகோணமலைத் தளம்.
தகமைகள் : CIMAன் அங்கத்தவர்/ இறுதிப்பரீட்சையில் 3 வருட அனுபவம்/ கணினிப் பயன்பாட்டில் உயர் அறிவு, 35 வயதிற்குள்/ 04.08.2012
Group GM Tokyo Cement Comp , Lanka
469 1/1 , Galle Road Colombo -03

**Cinnamon Lank Marketing**
**மாதவருமானம் 25000க்கு மேல் சம்பளம் வழங்கப்படும்**
தொழில்: சந்தைப்படுத்தல் முகவர்கள்
கிண்ணியா, மூதூர், திருக்கோணமலை, புல்மோட்டை பகுதிகளில் இருந்து ஆண் பெண் இருபாலாருக்கும் வாய்ப்புண்டு.
க.போ.த சாதாரன தரம் படித்த அனுபவமுள்ள அனுபவமற்ற இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
உடன் விண்ணப்பிக்க:
**Cinnamon Lank Marketing**
Nilaveli Multy Stors
8th mail Post Junction, Nilavali.
0772297251, 0772356121
rafi.ewc@gmail.com

மலைமுரசுடன் இலத்திரனியல் தொடர்பாலை மேற்கொள்ள நீங்கள் அஞ்சலிட வேண்டிய முகவரி
malaimurasu@hotmail.com
செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க
0770 18 02 18,

**SUGIRTHA STATIONERS**
சகல விதமான பாடசாலை உபகரணங்கள் நிறுவன உபகரணங்கள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள
295A, Court Road,Trincomalee.
Tel: 0264905921, 0775154336
Fax: 0264595374



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுடன் இணைந்திருந்தால் சிலர்....

எதிர்வரும் செப்டம்பர் 8ம் திகதி நடைபெற இருக்கின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் வெற்றிபெறும் பட்சத்திலேயே முஸ்லீம்கள் தமது சமூகத்தின் தனித்துவம், தேவைகள் மற்றும் அபிலாஷைகளை வென்றெடுக்க முடியும் அத்தோடு நாம் தேர்தலில் தனியாக போட்டியிடுவது எமது மக்களின் ஆணை என்றும் அரசுடன் சேர்ந்து போட்டியிட்டிருந்தால் சில கையாளாகாதவர்கள் எமது கட்சியை சின்னாபின்னமாக்கியிருப்பார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தமிழ் பேசும் மக்கள்.....

தமிழ் பேசும் மக்கள் வடகிழக்கு இணைந்த தாயகத்தையும் அல்லது குறைந்த பட்சம் மாநில சுயாட்சியையே விரும்புகிறார்கள். இதைப் படிப்படியாக பெறுவதற்கு இத்தேர்தல் வாய்ப்புக்களை பெற்றுத்தரும் என்றும் கிழக்கிலே தமிழ், முஸ்லீம் மக்களின் சந்தேகங்களைப் போக்கி இருவருக்குமான தன்னாட்சி, சுயகௌரவம் என்பவற்றை பெற்று நிரந்தர அரசியல் தீர்வொன்றை நோக்கிச் செல்லவும். சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக உடனடியாக அங்கீகாரம் பெறமுடியாவிட்டாலும், மாகாணசபை அதிகாரத்தின் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அதை செயற்படுத்தவும் முடியும். அத்தோடு மூதூர் பிரதேச அபிவிருத்தி, தமிழ், முஸ்லிம் ஒற்றுமை என்பன வெளிப்பட இருக்கும் களமாக இம்முறை மாகாண சபைத்தேர்தல் களம் அமைந்துள்ளதாக திரு. கு.நாகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

## கூட்டமைப்பின் முன்...

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு, தேர்தல் விண்ணப்பங்கள் கொடுத்த பின்னர் எங்களுடைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் இடம்பெற்ற பிரச்சார கூட்டங்கள் பலவற்றுக்கு நான் சென்றிருந்த வேளையில், குறிப்பாக திருமலை நகரப்பகுதி, திரியாய் மற்றும் மூதூர் பகுதிகளில் பலரோடும், பல மக்களோடும் நாங்கள் பேசியிருந்த சூழலில் மக்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

குறிப்பாக "ஒரு அரசாங்க அதிபரையோ அல்லது உதவி அரசராங்க அதிபரையோ அல்லது கிராமசேவகர் ஒருவரையோ அல்லது போனால் ஒரு பாடசாலை ஆசிரியரையோ நியமிக்கவோ இடமாற்றம் செய்யவோ எவ்வித அதிகாரமும் இல்லாத மாகாண சபையை கைப்பற்றி என்ன பயன்?" என்ற வினாவையும் மக்கள் எழுப்பியிருந்தனர்.

ஆனால் வடகிழக்கு இணைந்த எங்களுக்கான சரித்திர பூர்வமான பகுதியையும், காணி, பொலிஸ் அதிகாரங்களை கொண்டதும், எங்களை நாங்களே ஆளுகின்ற, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு தீர்வை நாம் பெற்றுக் கொள்ளவதற்காக கிழக்கு மாகாணத்தில் தேர்தல் அமையும் என தமிழ் தேசிய உணர்வாளர்கள் இவ் உண்மைகளை தமிழ் மக்களிடையே தெளிவான முன்வைத்த பட்சத்தில் அவ் உண்மைகளை மக்கள் தெளிவாக புரிந்து கொண்டதையும் எம்மால் அவதானிக்க முடிந்தது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லீம் ஆகிய இரு தேசிய இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் தமிழ்தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆகியவை பெரும்பாலான ஆசனங்களை கைப்பற்றுமிடத்து இரு கட்சிகளும் இணைந்து கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் தமது எதிர்காலத்தை கருத்திற் கொண்டு வடகிழக்கு இணைப்புக்கு ஒத்துப்போவதோடு முஸ்லீம்களுக்கான ஆட்சி உரிமையை பகிர்ந்து எங்களுக்குள் நாங்கள் ஒரு ஒற்றுமையுடன் கூடிய சட்டரீதியான அதிகார பகிர்வை ஏற்படுத்தவும் முடியும் என கூறியிருந்தோம்.

இவற்றை பெறுவதற்கு மக்கள் இம்முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தங்களுடைய வாக்குகளை ஆயுதங்களாக பயன்படுத்துவார்களேயானால் தமிழ் பேசக் கூடியவர்களின் வாழ்வுரிமை நிச்சயப்படுத்தபட்டதாகிவிடும், அத்தோடு இவ்வகையான தீர்வுகள் உடனடியாக கிடைத்துவிடும் என்று மக்களுக்கு நாம் பொய்யும் சொல்லவில்லை என ஸ்ரீதரன் மேலும் குறிப்பிட்டார்.

## மாணவர்களிடையே....

இம் மனுவில் Z – புள்ளியின் மீள் வரைவானது தேவையற்றது. (Unreasonable) என குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள் பிரதிவாதிகளாக உயர்க்கல்வி அமைச்சர். கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பரீட்சை ஆணையாளர் போன்றோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம் மனுவினூடாக மீள்வழங்கப்பட்ட Z – புள்ளிகளின் தீர்ப்பை வலிதாக்குமாறு அம் மாணவர்கள் மீயுயர் நீதிமன்றைக் கேட்டுள்ளனர்.

## பத்மலதா.....

எனது போதிய விளக்கமின்மை யாலும், தவறான வழிநடத்த லாலும் கட்சி ஒன்றில் கிழக்கு மாகாண சபை தேர்தலில் நான் நிறுத்தப்பட்டுள்ளேன். தற்போது நான் அத் தவறுகளை புரிந்து கொண்டுள்ளேன். என்பதை திருக்கோண மலை மாவட்ட தமிழ் பேசும் மக்களுக்கு தெரிவித்துக் கொள்வதாக பத்மலதா குறிப்பிட்டுள்ளார். அத்தோடு ஏழு வருடங்களாக இடம் பெயர்ந்து வாழும் சம்பூர் பிரதேச மக்களுக்கு அயராது சேவை செய்துவரும் சம்பூர் பிரதேச இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளருமான கு.நாகேஸ்வரன் அவர்களுக்கே எமது மக்களின் ஆதரவு தேவை என்று மேலும் குறிப்பிட்டார்.

இதே வேளை கடந்தவார தமிழ் பத்திரிகைகளில் சிலவற்றில் "சம்பூர் அகதிமுகாமிலிருந்து பெண்ணொருவர் தேர்தலில் போட்டி" என்ற பதப்பரயோகங்களை காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிதக்கது.

## இஸட் புள்ளிக்கு அமைவாக விண்ணப்பிக்கவும்

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு புதிய இஸட் - புள்ளிகளுக்கு அமைவாக பல்கலைக்கழக தெரிவில் மாற்றங்களை ஏற்படுத்த விரும்புவர்களுக்கான படிவங்களை வெளியிட்டுள்ளது.

2011ம் ஆண்டில் வெளியான இஸட் புள்ளிகளின் கணிப்பிட்ட முறை தவறென June 25ல மீயுயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததுடன் புதிய இஸட் - புள்ளிகளையும் வெளியிட்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவைப் பணித்திருந்தது. இதனடிப்படையில் திருத்தப்பட்ட Z- புள்ளிகள் வெளியாகி இருந்தன.

இத் திருத்தப்பட்ட இஸட் புள்ளிகளுக்கு அமைவாக கற்கைநெறி ஒங்கையோ, அதற்கேற்ப பல்கலைக்கழக ஒழுங்கையோ மாணவர் மாற்ற விரும்பினால் அதற்கென தரப்பட்ட படிவத்தில் ஆகஸ்ட் 8, 2012ற்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## இலங்கை ஏற்றுமதித் துறையில் வீழ்ச்சி

பொருளாதார நெருக்கடிப் பொறிக்குள் மேலும் இறுகும் இலங்கை!!!

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கமைய இலங்கை ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்தின் இக்காலப் பகுதிக்கான ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடும் பொழுது 15.1% மாக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வீழ்ச்சி ஏற்றுமதி வருமானத்தை 710 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குள் முடக்கியுள்ளது.

இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களுள் ஒன்றான பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருளான ஆடைத்துறையின் ஏற்றுமதி வருமானம் 13.5% த்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இரத்தினக் கற்களின் ஏற்றுமதி வருமானமும், இரசாயனப் பொருட்களின் ஏற்றுமதி வருமானமும் முறையே 45.4% த்தாலும் 15.8% த்தாலும் அதிகரித்திருந்தாலும் கூட விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 11.5% த்தால் வீழ்ச்சியடைந்திருந்தமை ஒட்டு மொத்த வீழ்ச்சிக்கும் காரணியாக அமைந்தது.


திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்

விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்



போன்றவை இடம்பெற வேண்டுமா?

தொடர்புகளுக்கு

அலுவலகம்-159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218

விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103


## மலைமுரசுக்கு நிருபர்கள் தேவை

திருக்கோணமலையிலிருந்து வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை வெளிவரும் மலைமுரசு பத்திரிகைக்கு பிரதேச பத்திரிகை நிருபர்கள் தேவை. கொடுப்பனவுகள் வழங்கப்படும் விருப்புடையவர்கள் உங்கள் சுய விபரக் கோவையை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கோ, தபால் முகவரிக்கோ ஒரு கிழமைக்குள் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல் :- malaimurasu@hotmail.com
தபால் முகவரி :- 159A, 2nd Floor, Sea view Road, Trincomalee.
தொடர்புகளுக்கு – 0754252042, 0770180218

## பதினைந்து நாட்கள் வில்லூன்றி மஹோற்ஸவம்

தட்ஷிண கைலாயமென போற்றப்படும் திருக்கோணமலையில் ராமபிரான் தனது வில்லூன்றியமையால் வில்லூன்றியென போற்றப்படும் கஜவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சண்முகப் பொருமாள் தேவஸ்தான மஹோற்ஸவம் 02.08.2012 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறும் திருவிழாவின் தேரோட்டம் 15.08.2012. அன்று இடம்பெறும்.






இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 05. 08. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org